பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
30 11 2024 **SATURDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஃபெஞ்சல் புயல் இன்று மாலை புதுச்சேரி அருகே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- வடதமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்துமழை பெய்து வருகிறது.
- புயல் பாதிப்பை குறைப்பதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- தமிழக நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லி புறப்பட்டுச் செல்கிறார்.
- 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா – பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

**>>>><<<<**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Fenjal** புயல், இன்று மாலை புதுச்சேரி அருகே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 56 செகண்ட்ஸ்)

இந்தப் புயல் காரணமாக தமிழகத்தின் வடகடலோர மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக தாழ்வான பகுதிகள் வெள்ளநீரால் சூழப்பட்டுள்ளன.

பல்வேறு இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

சாலைகளில் மழைநீர் தேங்கியுள்ளதாக வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

தொடர்மழை மற்றும் புயல் எச்சரிக்கை காரணமாக, சென்னை விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 49 செகண்ட்ஸ்)

திருவள்ளூர் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தனசேகரன் 39 செகண்ட்ஸ்)

விழுப்புரம் மாவட்டத்திலும் தொடர்ந்து மழை பெய்து வருவதாகவும், மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேஷ் 34 செகண்ட்ஸ்)

காஞ்சிபுரம் மாவட்டத்திலும் இன்று காலை முதல் பலத்த மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சிவக்குமார் 25 செகணட்ஸ்)

இந்நிலையில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மழை பாதிப்புகள் தொடர்பாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - மு.க.ஸ்டாலின் 31 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி, உதகையில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுதில்லி புறப்பட்டுச் செல்கிறார்.

மோசமான வானிலை காரணமாக, உதகையிலிருந்து சாலை மார்க்கமாக கோவை செல்லும் அவர், தனி விமானம் மூலம் புதுதில்லி புறப்பட்டுச் செல்லவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 30 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாநிலங்களின் காவல்துறை தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்றும் நாளையும் பங்கேற்கிறார்.

இந்த மூன்று நாள் மாநாட்டினை உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா நேற்று புவனேஸ்வரில் தொடங்கி வைத்தார்.

உள்நாட்டு பாதுகாப்பு குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

நாளை நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் நிறைவு விழாவில் பிரதமர் உரையாற்றுகிறார்.

>>>><<<<

நாடுமுழுவதும் மண்டல ஊரக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் நுகர்வோர் சேவைகளை வழங்க வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா மற்றும் மேற்குவங்கத்தில் உள்ள இந்த வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து நேற்று பாட்னாவில் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

டிசம்பர் மாத இறுதிக்குள் இந்த சேவைகளை ஊரக வங்கிகள் வழங்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கூடுதல் கடனுதவிகளை வழங்க வேண்டும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் ஷாமிலி ராஜ்குமாருடன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் இரண்டாம் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

>>>><<<<

நைஜீரியாவில் படகு கவிழ்ந்த விபத்துக்குள்ளானதில் 27 பேர் உயிரிழந்தனர்.

100 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

**Niger** ஆற்றில் சென்று கொண்டிருந்த இந்தப் படகு, அதிகம் பேர் பயணம் செய்ததால் விபத்துக்குள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 200 பேர் பயணம் செய்ததாகவும், பெரும்பாலானோர் மகளிர் என்றும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

நீரில் மூழ்கியவர்களில் இதுவரை 27 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>><<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா – பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் பாகிஸ்தான் சற்றுமுன் வரை 30 புள்ளி நான்கு ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 160 ரன் எடுத்துள்ளது.

>>>><<<<

கான்பராவில் நடைபெறும், இந்தியா – ஆஸ்திரேலியா லெவன் அணிகளுக்கு இடையிலான இரண்டு நாள் பயிற்சி போட்டி தொடங்குவது மழையினால் தாமதமாகியுள்ளது.

**>>>><<<<**

உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **Ding Liren** இடையேயான நான்காவது சுற்று ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இதுவரை இருவரும் தலா 2 புள்ளிகளுடன் சமநிலையில் உள்ளனர்.

**>>>><<<<**

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-4, 3-6, 7-6 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் **Dogt** யை வென்றார்.

**>>>><<<<**